நாளாகமம் 1 16:11

ஆண்டவரையும், அவருடைய வல்லமையையும் தேடுங்கள்; அவரு டைய சந்நிதானத்தை நித்தமும் தேடுங்கள்.

பிலிப்பியர் 4:5

உங்கள் அடக்கவொடுக்கம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக; கர்த்தர் அருகில் இருக்கிறார். ழுழுழு 5. கர்த்தர் அருகில் இருக்கிறார்:- அதாவது உதவிசெய்யக் காத்திருக்கிறார்.

சங்கீதங்கள் 23:6

இதுதான் அவரைத் தேடுகிற வர்களுடைய சந்ததியும் யாக்கோ பின் தேவனுடைய சந்ததியைத் தேடு கிறவர்களுடைய சந்ததியுமாம்.

சங்கீதங்கள் 16:11

அவர்கள் இப்போது என்னைக் கீழே தள்ளி வளைந்துகொண்டார் கள். பூமியின்பேரில் தங்கள் கண் களைக் கவிழ்த்துக்கொள்ளத் தீர்மா னித்தார்கள்.

சங்கீதங்கள் 27:4

அவர்கள் கிரியைகளுக்கும், அவர்கள் கருத்துகளின் கொடுமைக் குந் தக்காப்போல் அவர்களுக்கு ஈந்து, அவர்கள் கைகளின் செய்கைகளுக் கும், அவர்கள் பேருக்குந் தக்காப் போல் அவர்களுக்குப் பலனளியும்.

நாளாகமம் 2 15:2டி

அப்பொழுது தேவனுடைய ஆவி ஒதேதின் குமாரனாகிய அசரி யாஸின்மேல் இறங்கி வந்தது. அவன் வெளிப்பட்டு ஆசா வுக்கு எதிர்கொண்டுபோய் அவனை நோக்கி: ஆசாவே, யூதாவின் புத்தி ரரே, பெஞ்சமீன் கோத்திரத்தாரே, கேளுங்கள்: கர்த்தர் உங்களுக்குத் துணையாக வந்தார். நீங்கள் அவரைத் தேடினால் அவர் உங்களுக்கு அகப் படுவார். நீங்கள் அவரை விட்டுவிட் டாலோ அவரும் உங்களை விட்டு விடுவார். இஸ்ராயேல் வெகுநாளாய் மெய்யான தேவனுமில்லாமல், உபதேசிக்கிற குருக்களும் இல்லாமல் வேதத்துக்கேற்ற நடக்கையுமில்லா மல் இருக்கப் போகிறது. பின்னும் இஸ்ராயேலர் நெருக்கத்தில் அகப் பட்டுத் தங்கள் தேவனாகிய கர்த்த ருக்குத் திரும்பி அவரைத் தேடுவார்கள். அப்பொழுதே அவர் அவர்களுக்கு வெளிப்படுவார். அக்காலங்களிலே வெளியே போகிறவர்களுக்கும் சரி,

உள்ளே வருகிறவர்களுக்கும் சரி, சமாதானம் கிடையாது. ஆனால் தேசங்களின் குடிகள் எல்லோருக்குள்ளே நாலு திசையினின்று வந்த பயங்கரங்கள் இருக்கப் போகிறது. ஷஜாதியை ஷஜாதியும், பட்ட ணத்தைப் பட்டணமும் விரோதம் பண்ணுமே. தேவன் அவர்களை நானாவித இடுக்கத்திலும் கலங்கப் பண்ணுவார். நீங்களோ திடன் கொள்ளுங் கள். உங்கள் கைகளை நெகிழ்ந்து போக விடாதீர்கள்; உங்கள் கிரியை களுக்குச் சம்பாவனை கிடைக்கு மல்லவா? என்றான். இந்த வார்த்தைகளையும், ஓதேதின் குமாரனான தீர்க்கதரிசி யாகிய அஸரியாஸின் தீர்க்கதரிசனத் தையும் கேட்டபோது ஆசா திடாரிக் கம் கொண்டு யூதா தேசத்திலும் பெஞ்சமீன் தேசத்திலும் தான் பிடித் திருந்த பட்டணங்களிலும், எப்பிரா ம் மலையிலும் அகப்பட்ட விக்கிர கங்களை அகற்றிக் கர்த்தருடைய மண்டபத்திற்கு முன்பாக இருந்த கர்த்தருடைய பீடத்தை அபிஷேகம் பண்ணினான். பிறகு, யூதா ஷஜனங்களையும் பெஞ்ஷஜமீன் ஷஜனங்களையும் அவர் களோடு எப்பிராயீமிலும், மனாசே யிலும், சிமேயோனிலும் இருந்து வந்த அந்நியர்களையும் வரப்பண்ணி னான். (உள்ளபடி) இவர்களில் வெகு பேர்கள் தேவனாக கர்த்தர் ஆசா வோடு இருக்கிறதைக் கண்டு இஸ்ரா யேலை விட்டு அவனிடத்தில் அடைக்கலம் புகுந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஆசா அரசனுடைய பதினைந்தாம் வருஷத் திலே எருசலேமுக்கு வந்து கூடி, தாங்கள் கொள்ளையிட்டுக் கொண்டு வந்த திரவியங்களில் அவர்கள் அந்நாளிலே எழுநூறு மாடு களையும், ஏழாயிரம் கடாக்களையும் கர்த்தருக்குப் பலியிட்டார்கள். அவர்கள் முழு ஆத்துமத் தோடேயும், முழு மனதோடேயும் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தேடிப் பின்செல்ல வேண்டும் என்று (பூர்வம் செய்யப் பட்ட) உடன்படிக்கையைப் புதுப் பிக்கிறதற்காக ஆசா வழக்கப்பிர காரம் வந்தான். (அவன் அவர்களைப் பார்த்து:) சிறியோர் பெரியோர் ஸ்திரீ புருஷர் எல்லாரிலும் இஸ்ராயேலின் தேவ னாகிய கர்த்ரை எவன் தேடாமல் இருக்கிறானோ, அவன் சாகக்கடவா னென்றான். அதற்கு அவர்கள் மகா சப்தத் தோடும், கெம்பீரத்தோடும், பூரிகை களும், எக்காளங்களும் தொனிக்க மேற்படி உடன்படிக்கையைப் பண்ணி கர்த்தருடைய திருநாமத் தினாலே ஆணையிட்டார்கள். இவ்வித ஆணையைத் தவிர யூதா தேசத்தார் அனைவரும் (மீறி நடந்தால்) தாங்கள் சாபத்துக்க உட்பட்டவர்கள் என்று சொல்லிச் சபதம் கூறினார்கள்: ஆ! அவர்கள் மனசாரத்தானே மேற்சொல்லப் பட்ட ஆணையை இட்டதும், முழு இருதயத்தோடு கர்த்தரைத் தேடின தும் வாஸ்தவமே. ஆனதுபற்றிக் கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டு, அவர்களைச் சுற்றுப்புறத்தாரோடு யுத்தமில்லாமல் இளைப்பாறப் பண்ணினார். ஒரு விக்கிரகச் சோலையிலே இராசாவின் தாயாராகிய மாக்காள் பரியப்பென்னும் அருவருப்பான விக்கிரகத்தை ஸ்தாபித்ததைக் கேள் விப்பட்டு, ஆசா அவளை இராக்கினி யாயில்லாதபடிக்கு விலக்கிப் போட் டதுமன்றி, மேற்படி விக்கிரகத்தை உடைத்து நொறுக்கிக் கெதிரோன் பள்ளத்தாக்கிலே அதைச் சுட்டெரித் துப் போட்டான். மேடைகளோ இன்னும் இஸ் ராயேலிலே இருந்தன. ஆனால் ஆசாவின் இருதயம் அவன் உயிர் நாட்களிலெல்லாம் உத்தமமாகவே இருந்தது. அவனுடைய தகப்பனும் தானும் பரிசுத்தமென்று நேர்ந்து கொண்டிருந்த வெள்ளியையும், பொன்னையும், பலவித பணிமுட்டு முதலியவைகளையும் ஆசா தேவ னுடைய ஆலயத்திலே கொண்டு வந்தான். ஆசா அரசாண்ட முப்பத் தைந்தாம் வரும் மட்டும் தேசத்தில் யாதொரு சண்டையும் (நேரிட வில்லை).

சங்கீதங்கள் 34:17-18

ஆண்டவரே! எப்போது இதைப் பார்ப்பீர்? என் ஆத்துமாவை அவர்கள் கொடுமையில் நின்றும், எனக்கு ஏகமாயிருக்கிற ஆத்துமத் தைச் சிங்கங்களாகிய அவர்களி னின்றும் விடுவியும். பெரிய சபையில் உம்மை ஸ்துதிப்பேன்; திரளான சனங்க ளிடத்து உம்மைக் கொண்டாடு வேன்.

அருளப்பர் முதல் நிருபம் 4:13

அவர் தம்முடைய இஸ்பிரீத்துவிலிருந்து நமக்குத் தந்தருளினதினால், நாம் அவரிலும், அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதாக அறிந்திருக்கிறோம். (அரு. 14:17.) ழுழுழு 13. இஸ்பிரீத்துவிலிருந்து: - அதாவது, சேசுநாதர்சுவாமி இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களில் நமக்கு வேண்டியதை அளிக்கிறாரென்று அர்த்தமாம்.

தெசலோனிக்கேயர் 2 3:16

சமாதான கர்த்தர் எவ்விடத்திலும் உங்களுக்கு முடிவில்லாத சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பாராக.

சங்கீதங்கள் 105:4

ஆண்டவரே! நீர் உமது பிரசைகளுக்குக் காட்டின இரக் கத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளும்; நீர் தெரிந்துகொண்டவர்கள் அடை யும் நன்மைகளைப் பார்த்து, உமது சனத்திற்கு வருஞ் சந்தோஷத்தைக் கண்டு அகமகிழ்ந்து உமது சுதந்தர மானவர்களைப்பற்றி நீர் துதிக்கப் படும்படி,

அரசராகமம் 3 8:57

நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும், நம்மை நிகழ விடாமலும், அவர் நம்முடைய பிதாக்களோடு இருந் ததுபோல் நம்மோடும் இருந்து வாசம் பண்ணக்கடவாராக!

சங்கீதங்கள் 84:10

கிருபாகடாட்சமும், உண்மை யுஞ் சந்தித்துக்கொண்டன; நீதியும், சமாதானமும் முத்தமிட்டுக் கொண்டன.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:18

நான் உங்களை அநாதர்களாய் விட்டுவிடுகிறதில்லை; உங்களிடத்தில் வருவேன்.

இசாயாஸ் ஆகமம் 55:6

ஆண்டவரைக் காணக்கூடிய போதே அவரைத் தேடுங்கள்; அவர் சமீபித்திருக்கையிலே அவரைப் பிரார்த்தியுங்கள்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 1:18

சர்வேசுரனை ஒருவனும் ஒரு போதுங் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஏக சுதனே அவரை வெளிப்படுத்தினார். (1 தீமோ. 6:16; 1 அரு. 4:12.)

எபேசியர் 2:13

முன் ஒருகாலத்திலே தூரமாயிருந்த நீங்கள் இப்போது கிறீஸ்து சேசுவுக்குள்ளானவர்களாய் இருப்பதால், அவருடைய இரத்தத்தினாலே (சர்வேசுரனுக்குக்) கிட்டினவர்களானீர்கள்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 10:9

அவ்விடத்திலுள்ள நோயாளிகளைச் சொஸ்தமாக்கி, சர்வேசுரனுடைய இராச்சியம் உங்களுக்குச் சமீபித்தது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.

எஸ்திராஸ் 2 (நேகேமியா) 9:31

ஆனாலும் உமது மிகுதியான இரக்கங்களின் நிமித்தம் நீர் அவர் களை நிர்மூலமாக்கிவிடாமலும், அவர்களைக் கைவிடாமலும் இருந் தீர்; ஏனெனில் தேவரீர் கிருபையும் தயவுமுள்ள தேவனாயிருக்கிறீர்.

கொரிந்தியர் 2 13:11

மற்றப்படி சகோதரரே, சந்தோஷமாயிருங்கள். உத்தமராயிருங்கள், தேறுதலடையுங்கள், ஒரே சிந்தனையாயிருங்கள், சமாதானமாயிருங்கள். அப்போது சமாதானத்துக்கும் அன்புக்கும் கர்த்தாவாகிய சர்வேசுரன் உங்களோடு இருப்பார்.

யாத்திராகமம் 34:28

ஆகையால் மோயீசன் அவ்விடத்திலே நாற்பது பகலும் நாற்பது இரவுமாய்க் கர்த்தரோடு தங்கி அப்பத்தைச் சாப்பிடாமலும் தண்ணீரைக் குடியாமலும் இருந்தான்; கர்த்தரும் உடன்படிக்கையின் பத்து வசனங்களையும் கற்பலகைகளில் எழுதியருளினார்.